**செய்தி வெளியீடு எண் : 1162** **நாள் : 12.07.2022**

# செய்தி வெளியீடு

தமிழகத்தில் வசிக்கும் முகாம் வாழ் / முகாமிற்கு வெளியே வசிக்கும் இலங்கைத் தமிழர்களின் இந்தியக் குடியுரிமை, உயர்கல்வி பயிலுதல், தாயகத்திற்கு மீள திரும்புதல் போன்ற நீண்ட நாட்கள் நீடித்து இருக்க கூடிய பிரச்சனைகளுக்கு தீர்வுகாண மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி எண்.110-ன் கீழான அறிவிப்பின் படி அமைக்கப்பட்ட இலங்கைத் தமிழர் நல ஆலோசனைக்குழுவின் கூட்டம் குழுத்தலைவர் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் அயலகத் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி.கே.எஸ்.மஸ்தான் அவர்கள் தலைமையில் இரண்டாவது கூட்டம் இன்று அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறையின் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் உணவு தட்டுப்பாடு காரணமாக எழுந்துள்ள மக்கள் தேவையையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானத்திற்கிணங்க இதுவரை இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிவாரண உதவிகள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையிலிருந்து தமிழர்கள் தமிழகத்திற்கு வருவது தொடர்பான விவரங்கள் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இலங்கைத் தமிழ் மக்களின் நீடித்த தேவைகளுக்கு நிரந்தர தீர்வு காண அமைக்கப்பட்ட துணைக்குழு கூட்டத்தில் 11.07.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட கருத்துகளின் குறிப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை அறிவிப்பிற்கிணங்க முதற்கட்டமாக கட்டப்பட்டு வரும் 3510 புதிய வீடுகள் தற்போதைய நிலை தொடர்பாகவும், இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் திரு.கலாநிதி வீராசாமி அவர்கள், மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திருமதி.எ.தமிழரசி, அவர்களும், ஆலோசனைக்குழுவின் உறுப்பினர் செயலாளரும் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையருமான திருமதி.ஜெசிந்தா லாசரஸ், இ.ஆ.ப., அவர்கள், அரசு பொது மற்றும் மறுவாழ்வுத் துறை சிறப்பு செயலாளர் திருமதி.வீ.கலையரசி, இ.ஆ.ப., அவர்களும் மற்றும் ஆலோசனைக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in